சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:146/2023

2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் பிரகலாதன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

12.02.2024

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 27.12.1954 தேதியிட்ட தாவா 1வது லக்க சொத்தை ஜானகி அம்மாள் கிரையம் வாங்கிய பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 25.08.2014 தேதியிட்ட ஜானகிஅம்மாள் வாத்திக்கும் பிரதிவாதிக்கும் எழுதிக்கொடுத்த தானப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகும். 13.08.2014 தேதியிட்ட தாவா 2வது ல க்க சொத்திற்குரிய பட்டா. பட்டா எண்.75 கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகும். தாவா 1வது லக்கத்திற்கு ஜானகிஅம்மாள் பெயரில் உள்ள நத்தம் சர்வே பட்டா. பட்டா எண்.296 கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகும். தாவா 2வது லக்கத்திற்கு வாதி, பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாமாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.5 ஆகும். 06.01.2017 தேதியிட்ட பட்டா எண்.296 க்குரிய பட்டா அசல் வா.சா.ஆ.6 ஆகும். 07.11.2017 தேதியிட்ட வாதி, பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா பட்டா எண்–974

கணினி நகல் வா.சா.ஆ.7 ஆகும். பட்டா எண்.974 க்குரிய தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.8 ஆகும். தாவா 1 வது லக்கத்திற்கு வாதி பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணம்–4) அசல் வா.சா.ஆ.9 ஆகும். தாவா சொத்துகளுக்கான வழிகாட்டி மதிப்பு இணையதள நகல் வா.சா.ஆ.1 0 ஆகும். வாதி பிரதிவாதி பெயரில் உள்ள மின்கட்டணரசீது (எண்ணம் – 4) அசல் வா.சா.ஆ.11 ஆகும். வாதி பிரதிவாதி பெயரில் உள்ள பல்வகைரசீது அசல் வா.சா.ஆ.12 ஆகும். 26.05.2023 தேதியிட்ட வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.13 ஆகும். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.14 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை இல்லை.